[1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் அகற்றப்படவில்லை.

(ஆ) இதனால் மாற்று மனை வழங்க வேண்டிய அவசியமும் எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம் சி. முட்லூர் முதல் கிள்ளை வரை உள்ள நெடுஞ் சாலையில் ஏழை மக்கள், விவசாய மக்கள் வீடு கட்டி வந்துள்ளார் கள். சென்ற ஆண்டு அதை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து, இப்பொழுது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுத்தால் மாற்று மனைகள் கொடுத்து அவர்களை அப்புறப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே 15-3-1976 ஆம் தேதி அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அரசு நோட்டீஸ் கொடுத்தது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் அந்த இடங்களிலிருந்து நகர மறுத்ததன் காரணத்தால் மேற்கொண்டு மறுபடியும் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அப்பொழுது, ஓராண்டு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அகற்றப்பட இருக்கிறார்கள். ஓராண்டுக் காலம் கழித்து மாற்று மனைகள் கொடுப்பது பற்றியும் பரிசீலிக்கப் படும்.

சக்கரக்கோட்டை கண்மாய்.

*வினா எண் 145.— திரு. த. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை' பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரத்தில் உள்ள சக்கரக்கோட்டை கண்மாய் 'வைகை' பாசனத்தில் இணைக்கப்படாததால் அந்தக் கண்மாயை நம்பியுள்ள 8 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) 'வைகை' பாசனத்தில் இக் கண்மாயைச் சேர்த்து நிரந்தரமாக விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப்பரப்பு நிலம் 1679.32 ஏக்கர் ஆகும். 8,000 ஏக்கர் சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப் பரப்பில் இல்லை. இராமநாதபுரம் தென் கலிங்கின் மூலம் மூன்று நாட்களுக்கு 25 மில்லியன் கன அடி தண்ணீர் இப்பாசனத் திற்கு இவ்வாண்டு விடப்பட்டது.

(ஆ) வைகை அணையில் உள்ள நீர் அதன் பாசன ஆயக் கட்டுகளுக்கே போதுமானதாக இல்லை. இருந்தாலும் வைகை சீரமைப்புத் திட்டம் வேலை முடிந்த பின் இது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[1978 செப்டம்பர் 11

திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரத்தில் இரண்டு கண்மாய்கள் இருக்கின்றன. ஒரு கண்மாய் பெரிய கண்மாய். அது வைகைப் பாசனத்தோடு இணைக்கப்பட்டது. அதனுடைய பாசன ஏக்கர்கள் 2,600. இராமநாதபுரத்திலே உள்ள இன்னொரு கண்மாய் சக்கரக்கோட்டை கண்மாய். அந்தக் கண்மாய் வைகைப் பாசனத்தில் சேர்க்கப்படாததால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான மழை பெய்தாலொழிய தண்ணீர் கிடைப்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிற பொழுது சொன்னார்கள், தென் கலிங்கின் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டது என்று. அதற்குத் தண்ணீரைப் பெரிய கண்மாயில் தண்ணீர் வந்தால்தான் பெரிய கண்மாயிலிருந்து திறந்து விடுகிறார்கள். எனவே, இது வைகை பாசனத்தில் இணைக்கப்பட்டால் நல்லது. இல்லையென்றால் பெரிய கண்மாயில் தண்ணீர் இல்லை என்றால் திறந்து விடுவதில் சிரமம் இருக்கிறது. ஆகவே, வைகைப் பாசனத்தில் சக்கரக்கோட்டை கண்மாய் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன், சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப் பரப்பு நிலம் 1,679 ஏக்கர் 32 செண்ட் ஆகும், மேலும் வைகை அணையிலே ஏற்கனவே கொடுக்கப்பட வேண்டிய பாசனப் பயிர்களுக்குப் போதுமான நீர் இல்லாத நிலைமை இருக்கிறது. இன்று சீரமைப்புத் திட்டத்தின் மூலமாக விஸ்தரிப்புக் குண்டான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, 41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புத் திட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது முடிகின்ற நேரத்தில் இன்னும் எவ்வளவு நிலங்களுக்குப் பாசன வசதி விஸ்தரிக்கப்பட முடியும் என்பது இந்த அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறை பகுதியில் பாசன வசதி.

*வினா எண் 146—திரு. ர. ச, தங்கவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வால்பாறை தொகுதியிலுள்ள வால்பாறை கீழ்பகுதியில் உள்ள பூமிகள் டேம்களுக்கு அருகில் இருப்பதால், புஞ்சை நிலமென அறிவிக்கப்பட்டுள்ளதை மாற்றி நஞ்சை என அறிவித்து அந்நிலங்களுக்கு நீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS